# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 245/3—1976 දෙසැම්බර් 27 වැනි සඳුදා—1976.12.27

245/3 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

*சிடி/3/2/92*

**பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்**

**183 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1968 இன் 42 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர் வெலிகம போல்வத்த கலப்பதிகே ஆரியதாச ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக தங்காலை பட்டினம் சம்பந்தமான முன்சொல்லப்பட்ட பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1976 நவெம்பர் 26 இன் 240/14 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை நீக்கஞ் செய்கிறேன்.*

டபிள்யூ. பீ. ஜீ. ஆரியதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1976 திசெம்பர் 23.

1-47/1

---

*சிடி/3/2/92*

**நகரசபைகள் கட்டளைச் சட்டம்**

**184 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1968 இன் 42 ஆம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர் வெலிகம போல்வத்த கலப்பதிகே ஆரியதாச ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக தங்காலைப் பட்டினம் சம்பந்தமான முன் சொல்லப்பட்ட பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1974 மார்ச்சு 12 இன் 102/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1972 ஓகத்து 25 இன் 21/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் 18.11.1976 ஆந் திகதியிலிருந்து மேலும் திருத்துகிறேன் :—*

"(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய நகரசபை அமைக்கப்படும் வரைக்கும், அந்நோக்கத்திற்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நகரசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக வீரகெட்டிய, மெதமுலானையில் வதியும் திரு. பசில் ரோஹண ராஜபக்ச அவர்களை தங்காலைப் பட்டினத்தின் கருமங்களை நிருவகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கின்றேன்."

டபிள்யூ. பீ. ஜீ. ஆரியதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1976 திசெம்பர் 23.

1-47/2

சீடி/3/2/66

## பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

### 183 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 இன் 42 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர் வெலிகம பொல்வத்த கலப்பதிகே ஆரியதாச ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக தெவிநுவர பட்டினம் சம்பந்தமான முன்சொல்லப்பட்ட பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1970 பெப்புருவரி 27 இன் 14,894/6 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் மேலும் திருத்துகிறேன் :—

"(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய பட்டினசபை அமைக்கப்படும் வரைக்கும், அந்நோக்கத்திற்கென அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஒரு பட்டினசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக தெவிநுவர, கந்தபஹலயில் வதியும் திரு. அம்பலாங்கொடகே தோன் விக்ரர் சில்வா அவர்களை தெவிநுவர பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கின்றேன்."

டபிள்யூ. பீ. ஜீ. ஆரியதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1976 திசெம்பர் 27.

1-47/8

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது